

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 10.6.2025 அன்று தலைமைச் செயலகத்தில் நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப்பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள் உள்பட துறையின் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா:

# நெல்லை மத்திய மாவட்டத்தில் மின்னொளி கைப்பந்து போட்டி!

## அமைச்சர் கே.என். நேரு தொடங்கி வைத்தார் - மு. அப்துல் வகாப் எம்.எல்.ஏ. தலைமை!

நெல்லை, ஜுன் 12-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க மற்றும் துறையூர் சாரல் விளையாட்டு கழகம் இணைந்து நடத்தும் மாநில அளவிலான மாபெரும் மின்னொளி கைப்பந்து போட்டி வருகிற 14.06.2025, 15.06.2025 ஆகிய (சனி, ஞாயிறு) தேதிகளில் துறையூர் சாரல் மைதானத்தில்

மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சூ.அருள்மணி ஏற்பாட்டில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு பங்கேற்று விழாவினை துவக்கி வைத்து பரிசுகள் வழங்குகிறார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட மானூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க மற்றும் துறையூர் சாரல் விளையாட்டு கழகம் இணைந்து நடத்தும் மாநில அளவிலான மாபெரும் மின்னொளி கைப்பந்து போட்டி வருகிற 14,15 ஆகிய தேதிகளில் (அதாவது சனி ஞாயிறு) கங்கைகொண்டான் ஊராட்சி துறையூர் சாரல் மைதானத்தில் மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சூ.அருள் மணி ஏற்பாட்டில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. தலைமையில் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா, தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. நெல்லை மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜ், முன்னாள் துணை மேயர் முத்துராமலிங்கம், தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணி யன், மாநகர துணை செயலாளர் பிரபுபாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன், மலைகண்ணன், அரசு வழக்கறிஞர் கந்தசாமி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையாபாண்டியன், மாவட்ட சுற்றுச்சூழில் அமைப்பாளர் பல்க்குமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், கீழநத்தம் ஊராட்சி மன்ற தலைவர் அனுராதா ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள் மணி, முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க. மணிஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று விளையாட்டுப் போட்டியினை துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளை வழங்குகிறார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் முன்னாள் அமைச்சர் மைதீன் கான், முன்னாள் அமைச்சர் மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் பூங்கோதை ஆலடி அருணா, மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என்.மாலை ராஜா, முன்னாள் மாவட்ட செயலாளர் ஆ.துரை, நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், முன்னாள் எம்பி ஞானதிரவியம், நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், நெல்லை கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல், மத்திய மாவட்ட அவைத்தலைவர் முருகன்

நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச்செல்வி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ், தீர்மானக் குழு உறுப்பினர் சுப. சீதா ராமன், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலாசத்யானந்த், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் ராஜவர்மன், மாநில சட்டத்துறை துணை செயலாளர் ராஜா முகமது, உள்பட மத்திய மாவட்ட, மாநகர நிர்வாகி கள், ஒன்றிய செயலாளர்கள், பகுதி செயலாளர்கள், அணி அமைப்பாளர் கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் கீர்த்தி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் பிரபா அருள் மணி ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சூ.அருள் மணி செய்துள்ளார்.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

# நாளைய தமிழ்நாட்டுக்கான வலுவான அடித்தளம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஜுன் 12-

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:




**எந்த மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டாலும், மாவட்ட ஆட்சியர் போன்ற உயரதிகாரிகளைப் பார்த்தாலும், "உங்கள் பகுதியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் உணவின் தரத்தைப் பள்ளிகளுக்குச் சென்று ஆய்வு செய்தீர்களா?" என்று நான் கேட்பது வழக்கம்! அந்த வகையில், ஆசிரியர் ஒருவரே அதைச் செய்திருப்பது கண்டு மகிழ்கிறேன்.**

**காலை உணவுத் திட்டம் என்பது வெறுமனே மாணவர்களின் பசியைப் போக்கும் திட்டமோ, ஊட்டச்சத்தை அளிக்கும் திட்டமோ மட்டுமல்ல; நாளைய தமிழ் நாட்டுக்கான வலுவான அடித்தளம் அது!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

